செ.வெ.எண்: 742/2016 நாள்: 21.10.2016

# பத்திரிகை செய்தி

## குருந்தன்கோடு வட்டாரத்தில் நடமாடும் மண் பரிசோதனை நிலைய ஊர்தி, வருகை

நடமாடும் மண் பரிசோதனை நிலைய ஆய்வு ஊர்தி குருந்தன்கோடு வட்டாரத்தில் அக்டோபர் நான்காம் வாரத்தில் 24.10.2016 அன்று பரப்பற்று தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியிலும், 25.10.2016 மாவிளை தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியிலும், 26.10.2016 மணவிளை தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியிலும் பயணம் மேற்கொள்ளப்பட்டு மண்ஆய்வுப்பணி மேற்கொள்ளப்பட உள்ளது.

எனவே விவசாயிகள் இவ்வாய்ப்பினை பயன்படுத்தி தங்கள் மண்மாதிரிகளை நடமாடும் மண்பரிசோதனை நிலையத்தில் கொடுத்து உடனடியாக மண்மாதிரி முடிவுகளை பெற்றுக்கொள்ளலாம் என்று வேளாண்மை உதவி இயக்குநர், இராஜாக்காமங்கலம் திருமதி. எம்.ஆர்.வாணி அவர்கள் விவசாயிகளை கேட்டுக்கொண்டுள்ளார்கள்.

வேளாண்மை உதவி இயக்குநர்
இராஜாக்காமங்கலம்

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.